மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 195/2007

பெயர் : உதயகுமார்
சாட்சி – பி.வா.சா–2 நாள்:23.072025

---

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு)**

1. நான் நான்காம் பிரதிவாதியின் வாரிசுகள் அழைத்ததன் பேரில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் காமராஜ் நகரில் வசித்து வருகிறேன். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். என்னை சாட்சி கையெழுத்து போடுவதற்கு சுப்பிரமணியம் தான் அழைத்தார் என்றால் சரிதான். பாகபாத்திய விடுதலை ஆவணத்தில் என்ன தட்டச்சு செய்யப்பட்டது என்று விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். கருணாகரன் ஆவண எழுத்தர் தொழில் செய்பவர் அல்ல என்றால் சரிதான். அவர்தான் ஆவணத்தை தட்டச்சு செய்தார்.

2. நான்காம் பிரதிவாதி சுப்பிரமணியம் சொல்லித்தான் கருணாகரன் தட்டச்சு செய்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அதற்கு முன்பு கருணாகரனை எனக்கு தெரியாது சுப்ரமணியம் சொல்லித்தான் தெரியும். கருணாகரன் எந்த ஊர், என்ன விவரம் என்ற விவரம் எதுவும் எனக்கு தெரியாது. விடுதலை ஆவணத்தை யாரும் படித்துக் காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல கருணாகரன் சத்தம் போட்டு படித்தார். கருணாகரன் சத்தம் போட்டு படித்தார் என்ற விவரத்தை எனது முதல் விசாரணையில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன்.

3. கருணாகரன் ஆங்கிலத்தில் கையெழுத்து போட்டாரா, தமிழில் கையெழுத்து போட்டாரா என்றால் கையெழுத்து போட்டார் எதில் போட்டார் என்று நான் கவனிக்கவில்லை. நான் 2007 ஆம் ஆண்டு ரியல் எஸ்டேட் தொழில் செய்தேன். 2007 ஆம் ஆண்டிலும் ஒரு ஆவணத்தை ஏற்படுத்தும் போது அதில் தரப்பினர் அனைவரது புகைப்படங்கள் ஒட்ட வேண்டும் என்றால் சரிதான். சாரதி என்பவர் சாட்சி கையெழுத்தை ஆங்கிலத்தில் போட்டாரா தமிழில் போட்டாரா என்றால் தமிழில்தான் போட்டார்.

4. பத்திரப்பதிவாளர் அலுவலகத்தில் என்ன விவகாரங்கள் நடைபெற்றது என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பாக பாத்திய விடுதலைப்

பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்ட தேதியிலேயே, அதே குடும்பத்தில் ஒரு கிரைய பத்திரமும் பரிவர்த்தனை நடைபெற்றுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதே தேதியில் கிரைய பத்திரம் நடைபெற்ற விவரமும் எனக்கு நன்கு தெரியும் என்றும், தெரிந்தே நான் வழக்கிற்காக இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. கிரைய பத்திரத்தில் கையெழுத்து வாங்குவதாக சொல்லி, பொய்யாக பாக பாத்திய விடுதலை பத்திரத்திலும் கையெழுத்து வாங்கியுள்ளார்கள் என்றால் சரியல்ல. கருணாகரனுக்கு தட்டச்சு செய்யவே தெரியாது என்றும், கருணாகரன் தட்டச்சு செய்தார் என்றும், என் முன்னிலையில் பாகபாத்திய விடுதலைப் பத்திரத்தில் கையெழுத்து போட்டார் என்றும் சொல்வது உண்மை அல்ல என்றால் சரியல்ல. கருணாகரன் பாகபாத்தி விடுதலை பத்திரத்தை எல்லோருக்கும் படித்துக் காண்பித்தார் என்று நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6. கருணாகரனுக்கு சுப்ரமணியம் எந்த தொகையும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. கருணாகரனுக்கு பாத்தியம் உள்ள பங்கினை அபகரிக்க வேண்டும் என்பதற்காகத்தான் சுப்பிரமணியம் வா.சா.ஆ.5 பத்திரத்தை மோசடியாக உருவாக்கி உள்ளார் என்றால் சரியல்ல. கருணாகரனோ, வாதிகளோ சுப்பிரமணியம் பேருக்கு எந்த ஆவணமும் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 கருணாகரனால் சுயமாக தயார் செய்யப்பட்டது என்ற வாசகம் மோசடியாக சுப்ரமணியனாள் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணத்தை பற்றி எந்த விவரமும் எனக்கு தெரியாமல் சுப்ரமணியத்தின் வாரிசுகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN
Digitally signed by V KALIDASAN
Date: 2025.07.23 18:24:43 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.